Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 88/2015 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சதீஸ்குமார் |
| Father's Name | – | முத்துசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 4th July 2022.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது பொள்ளாச்சி, ஜமீன்ஊத்துக்குளி, நஞ்சையன் கவுண்டன்புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் இளங்கலை வணிக மேலாண்மை படித்துள்ளேன். நான்

காப்பீடு வளர்ச்சி மற்றும் ஒழுங்கு முறை ஆணையத்தில் காப்பீட்டு துறையில் முகவராக பணியாற்ற உரிமம் பெற்று, நியு இந்தியா அசுரன்ஸ் கோயம்புத்தூர் மண்டலத்தில் முகவராக வளர்ச்சி அதிகாரி 3 ம் எதிரியான விஜயேஸ்வர பிரசாத் கீழ் முகவாண்மை வணிகம் செய்து வந்தேன். 12-06-2012 ம் தேதி நியு இந்தியா பொள்ளாச்சி கிளையில் கோட்ட மேலாளர் தங்கமுத்து அவர்கள் தலைமையில் கிளை மேலாளர் கோபாலகிருஷ்ணன் முன்னிலையில் வளர்ச்சி அதிகாரிகள் மனோகரன், விஜயேஸ்வர பிரசாத், செல்வராஜ் ஆகியோர்கள் கூட்டாக முகவர்களுக்காக சிறப்பு ஊக்குவிப்பு திட்டம் ஒன்றினை அறிவித்தார்கள்.மேற்படி கூட்டத்தில் கடந்த 2011-12 ல் செய்த வணிகத்தினை விட ரூ.5,00,000/- அதிகம் வணிகம் செய்பவர்களுக்கு ஒரு கிராம் தங்க நாணயம் வழங்குவதாக அறிவித்தார்கள். 2011-12 ல் பிரிமியம் தொகை ரூ.5,07,494/- வசூல் செய்துள்ளேன். 2012-13 ல் ஏப்ரல் முதல் டிசம்பர் வரை ரூ. 12,78,520/- அதிகமாக வசூல் செய்து, சிறப்பு ஊக்குவிப்பு திட்டத்திற்கு தகுதி பெற்றேன். 13-01-2013 ல் நடந்த அடுத்த கூட்டத்தில் சிறப்பு ஊக்குவிப்பு திட்டம் குறித்து எந்த அறிவிப்பும் வெளியிடாததால் இது குறித்து கோட்ட மேலாளர் 1 ம் எதிரி தங்கமுத்து அவர்களிடமும், 2 முதல் 5 எதிரிகளிடமும் பரிசு கொடுக்காதது குறித்து கேட்டபோது மேற்படி திட்டத்தினை கைவிட்டுவிட்டதாக கூறி, என்னை ஏளனமாக கேலி கிண்டல் செய்தார்கள். அதனால் எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டது. மேற்படி பணத்தினை வாடிக்கையாளர்களிடம் வசூல் செய்யும்போது மேற்படி சிறப்பு ஊக்குவிப்பு திட்டத்தினை கூறி தான் வசூல் செய்தேன். அதனால் எனக்கு அவப்பெயர் ஏற்பட்டது. மேற்படி 1 முதல் 5 எதிரிகளின் செயலானது நிறுவன விதிமுறைகளுக்கு எதிராக உள்ளது. மேற்படி 1 முதல் 5 எதிரிகள் அவர்களது தனிப்பட்ட ஊக்க தொகையினை பெற்றுக்கொண்டு அவர்களது தனிப்பட்ட வளர்ச்சியினை ஏற்படுத்த எங்களிடம் சந்தா தொகையினை வசூல் செய்துள்ளனர். பின்னிட்டு இது குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோயம்புத்தூரில் உள்ள நியு இந்தியா அசுரன்ஸ் நிறுவனத்தின் மண்டல அலுவலகத்திற்கு மனு அனுப்பியிருந்தேன். அங்கிருந்து பதில் கிடைக்கப்பெற்று, சிறப்பு ஊக்குவிப்பு திட்டம் குறித்து காணப்பட்டது. (**ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக சாட்சியின் முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No. II,
Pollachi

ஒம்/-ஈ.மணிகண்டன்,பிஏ,பிஎல்

நீதித்துறை நடுவர் எண்.2

பொள்ளாச்சி.